4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. இ. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உரிமைப் பிரச்சினை முதல்வர் அவர்கள்மீது கொடுத்து இருந்தோம். அதற்கான விளக்கத்தை...(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான பதில் அனுப்பப்பட்டுவிட்டது. திரு. டி. மணி.*

(ஆ) நெய்யாறு இடதுகரை வாய்க்காலுக்குத் தண்ணீர் வழங்கல்

திரு. டி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்மூலமாக, கடந்த 40 வருடங்களாக விளவங்கோடு தாலுகாவிற்கு, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் வந்ததை, அந்த மாநில அரசு நிறுத்திவிட்டது. எனவே, 9 வருவாய்க் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, 7 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் கருகிப்போய் உள்ளன. அந்த தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அரசு பரிசீலிக்கும்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *இது சம்பந்தமாக காவிரியிலே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. அதெல்லாம் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது.*

5. கவன ஈர்ப்பு

திருவள்ளூர் மாவட்டம், பாத்தக்குப்பம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.*

2005 மார்ச் 16]

திரு. பி. எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வருவது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், கொத்தக்குப்பம் ஊராட்சி, பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 950. அப்பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறு வறட்சியால் வற்றிவிட்டது. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு வரப்பெற்ற நிதி மூன்றாம் தவணை வரையிலான ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு நான்காம் தவணை பெறப்பட்டதும், கொத்தக்குப்பம், பாத்தக்குப்பம் கிராமத்திற்குப் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தால் பாத்தக்குப்பம் கிராமம், சந்திரப்பள்ளி, தெலுங்கு காலனி கிராமங்கள் பயனடையும்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டபடி ஆழ்துளைக் குழாய்க் கிணறு வற்றிவிட்டது. இப்பகுதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீர் ஆதாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. சீரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வறட்சி நிவாரணப் பணி திட்டத்திலாவது அல்லது வேறு சிறப்புத் திட்டத்திலாவது மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட்டு, பைப் லைன் மற்றும் பம்ப் ஹவுஸ் கட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், கொத்தக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 950 இங்கே 4 ஆழ்துளைக் கிணறுகளும், ஒரு திறந்தவெளிக் கிணறும் உள்ளன. திறந்தவெளிக் கிணறுமூலமாக இந்தப் பகுதி மக்களுக்குத்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 மார்ச் 16

தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வறட்சியின் காரணமாக நீர் குறைந்து இருக்கிறது. இங்கே பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று வறட்சி நிவாரணத்தின்கீழ் இரண்டு முறை, இரண்டு தவணையாக 8,45,500 ரூபாய் அரசு மூலமாக வழங்கப்பட்டது. இருப்பினும், அங்கே தேவையான நீர் ஆதாரத்தைப் பெருக்கித் தராத காரணத்தினால், மேலும் அந்தப் பகுதியினுடைய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது மிக விரைவில் அங்கே தேவைப்படுகின்ற நீர் ஆதாரத்தைப் பெருக்கி, அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றி, அந்தப் பகுதி மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் போடப்பட்டுள்ள குழாய்க் கிணறு வற்றிவிடும்போது, இதனை நிர்வகிக்கும் ஊராட்சிகளில் நிதி வசதி இல்லையென, நீர் ஆதாரத்தை உருவாக்க காலம் கடத்தப்படுகிறது. அதுபோன்ற நிலைமைகள் இருக்கும்போது, இதுபோன்று திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம், மாற்றுக் குழாய், கிணறு, பைப் லைன் மற்றும் பம்ப் ஹவுஸ் கட்டி நீர் ஆதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகட்டும் அல்லது வறட்சி நிவாரணத்தின் மூலமாகட்டும் மிக விரைவில் அந்தப் பகுதியில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே அரசு ஆவன செய்யும் என்பதைக் கூறி அமைகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.